உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 09.07.2026 • மலர் 04 • இதழ்: 190 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 09.07.2026 • Vol : 04 • Issue : 190 • Page : 4 • Rs. 5/-

# இந்தோனேசியாவில் ஐஐஎம் வளாகம்

## ஜகார்த்தாவில் பிரதமர் நரேந்திர மோடி அதிகாரப்பூர்வ அறிவிப்பு

ஜகார்த்தா, ஜூலை 9

இந்தோனேசியாவில் ஐஐ எம் (பெங் களூரு) வளாகம் அமைக்கப்படும் என்று அந்நாட்டு தலைநகர் ஜகார்த்தாவில் பிரதமர் நரேந்திர மோடி அதிகாரப்பூர்வமாக நேற்று அறிவித்தார். அத்துடன், பாதுகாப்பு, கல்வி, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு (ஏஐ), விண்வெளித் துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகளுக்குப் பிரதமர் மோடி அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். முதல் கட்டமாக இந்தோனேசியா சென்ற பிரதமர் மோடியை ஜகார்த்தா விமானநிலையத்தில் அதிபர் பிரபோவோ சுபியந்தோ கட்டியணைத்து வரவேற்றார். பின்னர் பிரதமர் மோடியை உற்சாகமாக வரவேற்று முப் படை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

அந் நாட்டு அதிபர் பிரபோவோ சுபியந்தோவை தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள மெர்டேகா மாளிகையில் நேற்று சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது, ''இந்தியா மற்றும் இந்தோனேசியா இடையிலான இருதரப்பு உறவுகளில் ஒரு புதிய பொற்காலம் இது'' என்று பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்தார்.

இந்தியக் கல்வியை உலகளாவியரீதியில் கொண்டு செல்லும் முக்கிய முயற்சியாக, புகழ்பெற்ற ஐஐஎம் பெங்களூரு கல்வி நிறுவனத்தின் முதல் சர்வதேச வளாகம் இந்தோனேசியாவில் நிறுவப்படும் என்று பிரதமர் மோடி அதிகாரப்பூர்வ மாக அறிவித்தார். இது ஆசியான் பிராந்திய மாணவர்களுக்குப் பெரிதும் உதவும்.

பாதுகாப்புத் துறையில் மிகப்பெரிய மைல் கல்லாக, இந்திய ரஷ்ய கூட்டு தயாரிப்பான 'பிரம்மோஸ்' க்ரூஸ் ஏவுகணைகள், இந்தியாவின் உள்நாட்டு தயாரிப்பான 'அஸ்ட்ரா' வான் வழி ஏவுகணைகளை இந்தோனேசியாவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. பிலிப்பைன்ஸைத் தொடர்ந்து பிரம்மோஸ் ஏவுகணையைப் பெறும் 2வது ஆசியான் நாடு இந்தோனேசியா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் பிரதமர் நரேந்திர மோடி கூறும்போது, ''21ம் நூற்றாண்டு தொழில்நுட்பம் சார்ந்தது. செயற்கை நுண்ணறிவு (ஏஐ), தொலைத்தொடர்பு, ஸ்டார்ட் அப் சுற்றுச்சூழல் மற்றும் டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

மேலும், இரு நாடுகளின் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையை எளிதாக்க, இந்தியாவின் 'யுபிஐ' கட்டண முறை, இந்தோனேசியாவின் கட்டண முறையுடன் இணைக்கப்பட உள்ளது. விண்வெளித் துறையில் கூட்டு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பகிர்வும் பலப்படுத்தப்பட உள்ளது.

இந்தியாவின் 'செயில்' நிறுவனம் மற்றும் இந்தோனேசியாவின் 'பிடி கிரகடாவ் ஸ்டீல்' நிறுவனம் இணைந்து உருக்கு உற்பத்திக்கு புதிய ஆலையை இந்தோனேசியாவில் அமைக்கவுள்ளன. தவிர, விநியோகச் சங்கிலியைப் பலப்படுத்த முக்கிய தாதுக்கள் மற்றும் அரிய வகை காந்தங்கள் தயாரிப்பிலும் இரு நாடுகளும் கைகோத்து செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புகழ்பெற்ற மதிய உணவுத் திட்டம் மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்ற மக்கள் நலத்திட்டங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய, இந்திய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட உயர்தர கோதுமை விதைகள் இந்தோனேசியாவுக்கு வழங்கப்படவுள்ளன.



இந்தப் பயணத்தின் மூலம் இந்தியா இந்தோனேசிய இடையிலான உறவு புதிய கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தோனேசிய பயணத்தின் போது பிரதமர் நரேந்திர மோடிக்கு, அந்நாட்டின் உயரிய 'பிந்தாங் அதிபூர்ணா' விருதை அதிபர் பிரபோவோ சுபியந்தோ வழங்கி கவுரவித்தார்.

இந்த விருது இந்திய மக்களுக்கும், இரு நாடுகளின் நீண்ட கால நட்புறவுக்கும் கிடைத்த அங்கீகாரம் என்று பிரதமர் மோடி நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இந்தோனேசிய குடியரசின் ஒற்றுமை மற்றும் செழுமைக்காக சிறந்த முறையில் சேவையாற்றிய தலைவர்களுக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்படும்.

இதற்கு முன்னதாக கியூபா தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ, இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு, தென்னாப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா ஆகியோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொள்ளாச்சியை தலைமை இடமாக கொண்டு தனி மாவட்டம் உருவாக்க வேண்டுகோள்!!!

கோவை: ஜூலை09

பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் கே. நித்தியானந்தன் சென்னை தலைமை செயலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் செங்கோட்டையன் அவர்களை நேரில் சந்தித்தார் .




இந்த சந்திப்பின் போது : பொள்ளாச்சியை தலைமை இடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை மனு அளித்தார்.

மேலும் பொள்ளாச்சி, உடுமலை, தாராபுரம் உள்ளிட்ட பல பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் PAP பாசன திட்டத்தில் குழாய் வழியாக தண்ணீர் கொண்டு செல்லப்படும் கால்வாய் சீரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூ 4500 கோடி ரூபாய் நிதி ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்புக்கு மறுப்பு தெரிவித்தற்கு விவசாயிகள் சார்பாக நன்றி தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது கொங்கு மண்டலத்தில் பொள்ளாச்சியை போல் கோபியை தலைமை இடமாகக் கொண்டும், ஆத்தூரை தலைமை இடமாகக் கொண்டும் மாவட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தியுள்ளார்.

## தஞ்சாவூர் மாநகராட்சி குப்பை கிடங்கில் திடீர் தீ விபத்து

### புகை மண்டலமாக காணப்பட்டதால் போக்குவரத்து மாற்றம்

தஞ்சாவூர் ஜூலை 9

தஞ்சாவூர் மாநகராட்சி 19 ஆவது வார்டில் ஜெபமாலை புரத்தில் 28 ஏக்கர் பரப்பளவில் குப்பை கிடங்கு உள்ளது .மாநகரில் சேகரிக்கப்படும் குப்பைகளை இங்கே கொண்டு வந்து கொட்டி வைப்பதும், தரம் பிரிப்பதும் வழக்கம். இந்நிலையில் குப்பை கிடங்கில் திடீரென தீ விபத்து ஏற்பட்டு தீ மல மல பரவியது .குப்பைகளில் புகை மண்டலத்தோடு எரிந்ததால் அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக காணப்பட்டது .இதையடுத்து செக்கடி, மேல அலங்கம் ,மேல வீதி வடக்கு அலங்கம், கொடிமரத்து மூலை, கீழவாசல் பகுதி முழுவதும் புகை மூட்டமாக காணப்பட்டதால் அப்பகுதியில் உள்ளவர்கள் மூச்சு திணறல் ஏற்பட்டு, சிரமத்திற்கு ஆளானார்கள்.செக்கடி பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக வெளியேறினர். மேலும் ஜெப மாலைபுரம் வழியாக செல்லும் வாகனங்கள் அனைத்தும் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டது



தகவல் அறிந்து தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைத்தனர் .மேலும் மாநகராட்சி வாகனங்களில் கொண்டு தண்ணீர் , பீய்ச்சி தீயை அணைத்தனர். ஆனால் காற்று அதிகமாக இருந்ததால் தீயை கட்டுப்படுத்த முடியாமல் வீரர்கள் திணறினர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு மாநகராட்சி அதிகாரி கள் சென்று பார்வையிட்டு தீபத்து க்கான காரணம் குறித்த அங்கிரு ந்த பணியாளர்களிடம் கேட்டறிந்த னர் . மேலும் தீ விபத்தால் யாருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா? எனவும் அருகில் வசிப்பவர்களுக்கு உடல் நலக்குறைவு ஏதும் மேற்பட்டு உள்ளதா? எனவும் கேட்டறிந்தனர் கடந்த 17ஆம் தேதி குப்பை கிடங் கில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில் திடீரென மறுபடியும் தீ விபத்து ஏற்பட்டது. தொடர்ந்து இருமுறை தீ விபத்து ஏற்பட்டதால் ஏதேனும் சதியால் தீ விபத்து ஏற்பட்டுள்ளதா என்பது என போலீசார் விசாரித்து வருகின்றனர்

குப்பை கிடங்கில் தீப்பிடித்து எரிவது குறித்து தகவல் அறிந்ததும் முரசொலி எம்பி நேரில் அங்கு சென்று பார்வையிட்டு ஆய்வு, செய்து விரைந்து தீயை அணைக்க தீயணைப்பு அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது மாநகராட்சி மேயர் பொறுப்பு டாக்டர் அஞ்சுகம் பூபதி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், தீயணைப்புத் துறையினர் உடன் இருந்தனர்

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### கோவையில் உரம் கடத்தல் விவகாரம்

## அவதூறு பரப்புவதாக அதிமுக நிர்வாகி மீது புகார்



கோவை ஜூலை:09

கோவையில் உரம் கடத்தல் விவகாரத்தில் அவதூறுபரப்புவதாகஅதிமுகநிர்வாகிமீதுகோவைஎஸ்பிஅலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது.கோவைமாவட்டம் திருமலையாம்பாளையத்தில் பகுதியில் உள்ள குடோனில் சட்டவிரோதமாகபதுக்கிவைக்கப்பட்டிருந்த 60 டன் யூரியாஉரமூட்டைகள்சமீபத்தில் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தவிவகாரத்தில் தன் மீதுஅவதூறுபரப்புவதாகதிருமலையாம்பாளையம் திமுகபேரூராட்சிதலைவர் எஸ்பி அலுவலகத்தில் புகார் மனு அளித்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது: விவசாயத்திற்குபயன்படுத்தப்படும் யூரியாஉரத்தைஒரு தனியார் நிறுவனம் சட்டத்திற்குபுறம்பாககர்நாடகாவில் இருந்துகடத்திவந்துகோவைதிருமலையாம்பாளையத்தில் உள்ளஒருகுடோனில் பதுக்கிஉள்ளது.

பின்னர் இயந்திரத்தின் மூலம் திரவமாகமாற்றிகேரளாவிற்கு அனுப்பியது தெரியவந்தது. விவசாயிகள் போராட்டத்தால் காவல்துறைஅதிகாரிகள் மற்றும் வருவாய் துறையினர் ஆய்வுசெய்துகுடோனைசீல் வைத்தனர். அந்நிறுவனத்தைநடத்திய 7 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவுசெய்தனர்.

இதற்கிடையேதிருமலையாம்பாளையத்தைசேர்ந்தஅதிமுகநிர்வாகிஇந்தகுடோன் திருமலையாம்பாளையம் பேரூராட்சியின் அனுமதியோடுநடந்தது.பேரூராட்சிதலைவர் மற்றும் 8வதுவார்டுஉறுப்பினர் ஆகியோருக்கு தெரியாமல் இந்தநிறுவனம் நடத்தவாய்ப்பில்லைஎனஎங்கள் மீதுவீண் பழியைசுமத்திசமூகவலைதளத்தில் அவதூறுபரப்புகிறார்.

எனவேஇந்தவிவகாரத்தில் எங்கள் மீதுஅவதூறுபரப்பும்அதிமுகநிர்வாகிமீதுஉரியநடவடிக்கைஎடுக்கவேண்டும்.இவ்வாறுஅதில் கூறப்பட்டிருந்தது.

## தன் மீது அவதூறு பரப்பும் நபர் மீது கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்



கோவை ஜூலை:09

கோவை மாவட்டம் வேடப்பட்டி பகுதியைச் சேர்ந்த நபர் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரை சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்துள்ளார்.அந்த மனுவில்,தனது குடும்பத்தினருடன் இந்த பகுதியில் தான் வசித்து வருவதாகவும்,வேடப்பட்டி பேரூராட்சியில்,13வது வார்டு உறுப்பினராக தான் உள்ளதாகவும், வேடப்பட்டி சாலையில் பெட்டிக்கடை வைத்து,பூ வியாபாரம் செய்து வருவதாகவும்,அந்த வகையில், கந்துவட்டி தொழில் செய்து,சீட்டு கம்பெனி நடத்தி வருகின்ற நபர் கடந்த 20 ஆண்டுகளாக தனக்குத் தெரியும்,அவர் முறையான ஆவணங்கள் எதுவும் இல்லாமல்,பதிவு செய்யப்படாத சீட்டு கம்பெனி நடத்தி,அதன் மூலம் பொதுமக்களின் பணத்தினை ஏமாற்றிவிட்டு பணத்தை திரும்ப செலுத்தாமல் இருந்து வருகிறார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எனக்கும்,மேற்படி நபருக்கும் எந்த விதமான,வரவு செலவுகள் இல்லை எனவும்,அவர் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர்,நான் சீட்டு எடுத்துக் கொடுத்த நபர்களுக்கும் 11 லட்சத்திற்கும் மேற்படியான தொகையை செலுத்தாமல் இருந்து வருகிறார். தொடர்ந்து மேற்படி சீட்டு நடத்தி,சீட்டுகளில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும் சமயத்தில் அவர் என்னிடம் உதவி கேட்பார்.

அந்த சூழ்நிலைகளில் பொதுமக்களிடம் அவருக்காக பேசி பணத்தை விரைவில் தருவார்,நான் பெற்று தருகின்றேன் என கூறி பிரச்சினைகளை சரி செய்து தருவதாக நான் கூறியிருந்தேன்,ஆனால் சீட்டு போட்ட நபர்களுக்கு முறையாக பணம் வழங்காமல் ஏமாற்றி வந்தவுடன், பலமுறை அவருக்காகவே நான் கடனை திருப்பி தருவதாக பொதுமக்களிடம் அளித்துள்ளதை,துடுப்புசிட்டாக பயன்படுத்தி,இந்த நபர் மற்றும் அவரது உறவினர் ஆகிய இருவரும் இணைந்து,எனது வீட்டிற்கு வந்து வீட்டில் இருந்த பெண்களிடம் தகராறில் ஈடுபட்டார்.

இது சம்பந்தமாக காவல்நிலையத்திலும் புகார்அளித்துள்ளேன். தற்பொழுது நான்அவரிடம் பணமோசடி செய்து விட்டதாக,ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களின் வாயிலாக தொடர்ந்து,தன் மீது அவதூறு பரப்பி வருகிறார்,அவர் கூறுவதில் எந்த வித மூதாந்திரமும் இல்லை எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் கீழ் உள்ள சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி மைய சார்பில் பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு தொடர் சித்த மருத்துவ முகாமினை மாவட்ட கலெக்டர் ச.கவிதா கொடியசைத்து தொடங்கி வைத்தார்ர்.

ஓஎன்ஜிசிக்குஎதிரான போராட்ட வழக்கு

# முன்னாள் அமைச்சர் கோவி செழியன் உள்பட9 பேர் தஞ்சாவூர் கோர்ட்டில் ஆஜர்



தஞ்சாவூர் ஜூலை 9

கதிராமங்கலத்தில் ஓ என் ஜி சி போராட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் உள்பட 9 பேர் தஞ்சாவூர் கோர்ட்டில் ஆஜர் ஆஜ ராகினர்

தஞ்சாவூர் மாவட்டம் கதிராமங்கலத்தில் ஓ என் ஜி சி நிறுவனத் துக்கு எதிராக கடந்த 2017 ஆண்டு ஜூன் 19ஆம் தேதி பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். அதன் ஓராண்டு நினைவு நாளை முன்னிட்டு கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் தேதி கதிராமங்கலத்தில் ஓராண்டு நினைவுக் கூட்டம் நடைபெற்றது

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சரும், திருவிடைமருதூர் தொகுதி எம்எல்ஏ கோவி செழியன், காவிரி உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப் பாளர் மணியரசன், வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி ஆர் லோக நாதன் உள்பட 29 பேர் மீது பந்தநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர்

இந்த வழக்கு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் வழக்கை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டான தஞ்சாவூர் முதலாம் ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது அப்போது இந்த வழக்கில் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் கோவி. செழியன், மணியரசன், டி ஆர் லோகநாதன், உள்பட 9 பேர் ஆஜராகினர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கனிமொழி வருகிற 17ஆம் தேதி க்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்

உயிருக்கு ஆபத்து:

# குளிப்பதை மறைந்திருந்து பார்ப்பதாகவும் மது போதையில் அசிங்கமாக பேசி வரும் அண்டை வீட்டு நபர் மீது நடவடிக்கை எடுக்க எஸ் பி யிடம் மூதாட்டி மனு



நாகர்கோவில் ஜூலை 9

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த வாத்தியார்விளை தெலுங்கு செட்டி தெரு பகுதியை சேர்ந்த வயதான தம்பதிகளான செல்லத்துரை மற்றும் அவரது மனைவி பிலோமினாள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எஸ்பி ஸ்டாலினை சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்தனர் அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது :

எனக்கு மூன்று பெண் பிள்ளைகள் உண்டு. அவர்களுக்கு திருமணமாகி விட்டது. அவர்கள் செலவுக்கு தரும் பணத்தில் வாழ்க்கை நடத்தி வருகிறோம். எங்கள் வீட்டின் அருகில் குடியிருக்கும் நபர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் நாங்கள் குடியிருக்கும் இடத்தை அபகரிக்க முயற்சித்து வருகின்றனர். வயதான காலத்தில், நிம்மதியாக வாழ விடாமல், அடிக்கடி கெட்ட வார்த்தை பேசி அவதூறு பேசுவதுடன் இடத்தை காலி செய்ய மிரட்டல் விடுத்து வருகிறார்கள். பலமுறை இதுகுறித்து நாங்கள் வடசேரி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன்பு இரவு திடீரென அண்டை வீட்டுக்காரர் மற்றும்

அவரது மனைவி சேர்ந்து எங்களை தரைகுறைவாகவும், மனது வேதனை படும் படியாகவும் தொடர்ந்து பேசியும் அடிக்கவும் முற்பட்டதால் நாங்கள் அவசரதேவைக்காக 100 அழைத்து புகார் தெரிவித்ததின் பேரில் காவல்துறையினர் வந்து விசாரித்து எங்களையும் அண்டை வீட்டுக்காரரையும் காவல் நிலையம் வரச் சொல்லி சென்றனர். எனவே நாங்கள் காவல் நிலையம் சென்றிருந்தோம் அண்டை வீட்டுக்காரர் காவல் நிலையம் வந்திருந்தனர் அங்கு நடைபெற்ற விசாரணையின் இறுதியில் இனிமேல் வயதான தம்பதியினருக்கு எந்தவித தொந்தரவும் கொடுக்க மாட்டேன் என அண்டை வீட்டுக்காரர் உறுதியாக தெரிவித்தார். மேலும் காவல் நிலையத்திலிருந்து நாங்கள் வீடு வந்த உடனேயே எனது அண்டை வீட்டுக்காரர் மது போதையில் தகாத வார்த்தைகளால் பல மணி நேரம் கெட்ட வார்த்தையால் எங்களை திட்டியும் அடிக்கவும் முற்பட்டு வந்தார். வடசேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எனது அண்டை வீட்டுக்காரர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டதால் எங்களால் நிம்மதியாக இருக்க முடியவில்லை எனவே மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வயதான தம்பதிகளான எங்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது மட்டுமல்லாமல் இரவில்

குடிபோதையில் அண்டை வீட்டுக்காரர் அவருடைய வீட்டில் இருந்து மது பாட்டில்களை தங்கள் வீட்டில் எரிந்து உடைந்து அராஜகத்தில் ஈடுபட்டு வருவதாகவும், வயதான தம்பதியினரான தாங்களுக்கு வீட்டில் குளிப்பதற்கு போதுமான இட வசதி இல்லாததால் வெளியில் வைத்து குளித்து வருவதாகவும், அவ்வாறு தான் குளித்துக் கொண்டிருப்பதை அண்டை வீட்டு நபர் மறைந்திருந்து பார்க்கிறார் இதனால் நிம்மதி இல்லாமல் இருந்து வருகிறோம் எனவே மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தங்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அசம்பாவிதங்கள் நடைபெறும் முன் அண்டை வீட்டு நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# முப்பெரும் வரலாறுகளை நினைவு கூறும் வகையில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு விளக்க கருத்தரங்கம்



மதுரை ஜூலை 9

மதுரை பாண்டி கோவில் பகுதியில் உள்ள தனியார் மஹாலில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மதுரை கிழக்குத் தொகுதி மாவட்டம் சமூக ஊடக மையம் சார்பாக ஜூலை 7 ரெட்டமலை சீனிவாசன் பிறந்த தினம் ஜூலை 15 காமராஜர் பிறந்தநாள் மற்றும் தொல்காப்பியன் நினைவு தினம் ஆகிய முப்பெரும் வரலாறுகளை நினைவு கூறும் வகையில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு விளக்க கருத்தரங்கம் நடைபெற்றது.

சமூக ஊடக மைய மாவட்ட அமைப்பாளர் கல்மேடுகாளிதாஸ் தலைமை வகித்தார் கிழக்கு மாவட்ட செயலாளர் அரச முத்துப்பாண்டியன் முன்னிலை வகித்தார் தொடர்ந்து நடைபெற்ற இந்நிகழ்வில் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன் மாவட்ட பொருளாளர் நல்ல தம்பி மாவட்ட செய்தி தொடர்பாளர் கல்யாணி மாவட்ட துணைச் செயலாளர்கள் மஸ்தான்பட்டி ஆறுமுகம் குமார் வளவன் மாக்கண்டன் மண்டல செயலாளர் கார்வண்ணன் மண்டல துணைச் செயலாளர்கள்வினோபாகாலனிமூர்த்தி ராம்குமார்பாண்டியன் கதிரவன் ஆனந்தன் சிறப்பு அழைப்பாளர்கள் கருத்தியல் பரப்பு மாநில செயலாளர் செல்லபாண்டியன், முன்னாள் மண்டல செயலாளர் மாலின், வட்டச் செயலாளர் முருகானந்தம் உட்பட விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்

மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு

# ஸ்ரீ காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை



விளாத்திகுளம் ஜூலை09.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் கால பைரவருக்கு தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு இன்று சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. முன்னதாக திருமஞ்சனம், மஞ்சள், அரிசி மாவு, பால், தயிர், சந்தனம், தேன், விபூதி, பஞ்சாமிர்தம், பன்னீர் உள்ளிட்ட அபிஷேக பொருட்கள் கொண்டு சிறப்பாக அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வண்ண மலர்கள் அணிவித்து காலபைரவருக்கு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு மகாதீபாராதனை, காட்டப்பட்டது. இதில் விளாத்திகுளம் பகுதியை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

100 நாள் வேலைத்திட்டத்தை முறையாக வழங்கக்கோரி

# ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்ட கிராம மக்கள்



விளாத்திகுளம் ஜூலை 9

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மந்திக்குளம் ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் 100 நாட்கள் வேலை திட்டத்தில் மந்திக்குளம், ஓ.லட்சுமிநாராயணபுரம், லெக்கம்பட்டி, இலந்தைக்குளம், மீனாட்சிபுரம், கோட்டநத்தம் ஆகிய 6 கிராமங்களைச்சேர்ந்த 650க்கும் மேற்பட்ட கிராம மக்கள் 2 கூட்டமைப்பாக பிரிக்கப்பட்டு 100 நாட்கள் வேலை வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அனைத்து வேலை அட்டைதாரர்களுக்கும் 100 நாட்கள் பணி வழங்காமல் 50க்கும் குறைவான நாட்களே பணி வழங்கும் நிலை இருந்து வருகிறது. இதனை முறைப்படுத்தி அனைத்து வேலை அட்டை காரர்களுக்கும் 100 நாட்கள் பணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் தங்கள் கோரிக்கைகளை மனுவாக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் அளித்து உடனடியாகநடவடிக்கைஎடுக்ககேட்டுக்கொண்டனர்.

அசம்பாவிதம் நடக்கும் முன் அகற்றப்படுமா?

# காட்பாடியில் ஆடும் நிலையில் உள்ள பழைய இரும்பு மின்கம்பம்: பொதுமக்கள் பீதி



வேலூர், ஜூலை 9

காட்பாடி மதிநகர் பகுதியில் இருந்து அறுப்பு மேடு செல்லும் சாலையோரம் 'பாண்டியன் மடுகு' புனரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக அங்குள்ள (கனி அமுது) தனியார் திருமண மண்டபம் அருகே மழை நீர் செல்லும் கால்வாயை சீரமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இந்த கால்வாய் கரையின் ஓரத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டு தற்போது ஒயர்கள் (மின்கம்பிகள்) ஏதுமின்றி கைவிடப்பட்ட பழைய மின்வாரிய இரும்பு கம்பம் ஒன்று உள்ளது.

தற்போது நடைபெற்று வரும் கால்வாய் புனரமைப்பு பணிகளின் காரணமாக இந்த பழைய மின்கம்பத்தின் அடிப்பகுதியில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மின்கம்பம் தனது பிடிப்பை இழந்து பலத்த காற்று வீசும் போதெல்லாம் அபாயகரமாக ஆடி வருகிறது. எந்த நேரத்திலும் இது சரிந்து விழலாம் என்ற சூழல் நிலவுகிறது.

இந்தச் சாலையானது மதிநகர் மற்றும் அறுப்புமேடு பகுதிகளை இணைக்கும் முக்கிய பாதையாகும். இதனால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவமாணவிகள், வேலைக்குச்செல்வோர்எனதினமும்நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் இந்த வழியைக் கடந்து செல்கின்றனர்.

மின்கம்பிகள் இல்லை என்றாலும், இரும்பு கம்பம் திடீரென சரிந்து விழுந்தால் பெரிய அளவில் உயிர்ச்சேதமோ அல்லது விபத்தோ ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மின்வாரிய அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு அசம்பாவிதம் ஏதும் நடப்பதற்குள் இந்த ஆபத்தான பழைய மின்கம்பத்தை அப்புறப்படுத்த வேண்டும்" என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

# ரூ.21.84 கோடிக்கு குறுவை தொகுப்பு திட்டம் வழங்க இலக்கு: வேளாண் உற்பத்தி ஆணையர் தகவல்



தஞ்சாவூர் ஜூலை 9

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூபாய் 21.84 கோடிக்கு குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் தமிழக அரசின்செயலரும், வேளாண் உற்பத்தி ஆணையருமான சங்கர் கூறினார்

தஞ்சாவூர்அருகே ராஜேந்திரன், திருவையாறு அருகே விளாங்குடி, பாபநாசம் அருகே கணபதி அக்ரஹாரம், கும்பகோணம் அருகே சோழன் மாளிகை ஆகிய கிராமங் களில் குறுவை சாகுபடிசிறப்பு தொகுப்பு திட்டம் தொடர்பாக ஆய்வு செய்த பின்னர் தெரிவித் ததாவது:

காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்ட ங்களில் குறுவை, கார் மற்றும் சொர்ண வாரி பருவங்களில் மேற் கொள்ளப்படும் நெல் சாகுபடியை ஊக்குவிக்கவும், நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் ரூபாய் 134.83 கோடி மதிப்பில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு முதல்வர் அறிவித்தார்

இத்திட்டத்தின் கீழ் நெல் இயந் திர நடவுஅல்லதுநேரடிநெல்விதைப்புக்கான ஊக்கத்தொகை, உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்ட உரக்கலவை ,விதை நெல் விநி யோக மானியம் புதிதாக வெளியிடப்பட்ட நெல் ரகங்களின் சான்று விதை உற்பத்திக்கான ஊக்கத் தொகை ஆகிய இனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, குறுவை சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படு கிறது

இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 54 ஆயிரத்து 600 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 21.84 கோடி மதிப்பில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

எனவே விவசாயிகள் அனைவரு ம் திட்டத்தில் முழுமையாக பயன் படுத்திக் கொள்ளலாம் என்றார் வேளாண் உற்பத்தி ஆணையர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட கலெக்டர் ரேவதி கோட்டாட்சியர்க ள் நித்யா (தஞ்சாவூர்) திருமலை (கும்பகோணம்),வேளாண்துறை இணை இயக்குனர் லட்சுமி காந்த ன் ,துணை இயக்குனர்கள் சாருமதி (மாநில திட்டம்) அய்யம்பெருமாள் (உழவர் பயிற்சி நிலையம் ) அறவாழி ,(நெல் மற்றும் சிறுதானியம்) மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சாமுவேல் தோட்டக்கலை துணை இயக்குனர் சக்திவேல் உள்ளிட் டோர் கலந்து கொண்டனர்

திருச்சியில்

# சட்டவிரோதப் பண பரிமாற்ற வழக்கில் 6 பேர் கைது: சர்வதேச ஹவாலா கும்பலுடன் தொடர்பு



திருச்சி, ஜூலை 09

திருச்சியில் சட்ட விரோதப் பணம் பரிமாற்ற விவகாரத்தில் ரூ.14.40 லட்சம் பணத்துடன் கைது செய்யப்பட்ட 6 பேருக்கும் சர்வதேச ஹவாலா கும்பலுடன் தொடர்பு இருப்பதால், அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணையை துவக்கி இருப்பதாக கூறப்படுகிறது.

திருச்சி கேகே நகர் காவல் உதவி ஆணையர் கென்னடி தலைமையில், கே.கே.நகர்காவல்நிலைய ஆய்வாளர் பெரியசாமி, உதவி ஆய்வாளர் செபாஸ்டின் உள்ளிட்ட 17 காவல் அதிகாரிகள்போதைப்பொருள்மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் பல்வேறு இடங்களில் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் கே.கே.நகர்காவல்நிலையஎல்லைக்குட்பட்ட சுப்பிரமணியபுரம் ராஜா தெருவில் உள்ள தனியாருக்கு சொந்தமான வீட்டில் உள்ள ஒரு அறையில் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை நடத்தினர். அப்போது அங்கு கணக்கில் காட்டப்படாத ரூ.14.40 லட்சம் பணம், 150க்கும் மேற்பட்ட ஏடிஎம் கார்டுகள், 50 செல்போன்கள், சிம் கார்டுகள் இருந்தன.

இது தொடர்பாக, வீட்டில் தங்கியிருந்த 6 பேரிடம் போலீஸார் விசாரணை நடத்தியபோது, முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்துள்ளனர்.

இதையடுத்து, ராமநாதபுரம் தமீம் அன்சாரி, உத்திரகோசமங்கை அஜ்மீர் அலி, பழனிமுருகன், பிரவீன், முத்தமிழ்ச்செல்வன், கோடிக்குளம் ராஜ்குமார் ஆகிய 6 பேரையும் கைது செய்து, 2 நாட்களாக விசாரித்தனர்.

இதில் 6 பேரும் இந்திய பணத்தை அமெரிக்க டாலராக மாற்றுவது, டாலரை இந்தியாவின் ரூபாயாக மாற்றுவது உள்ளிட்ட சட்ட விரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்காக ரூ.1 லட்சத்துக்கு ரூ.6,000 கமிஷன் கிடைத்துள்ளது. சிங்கப்பூரைச் சேர்ந்த ஒருவரின் வங்கி கணக்குக்கு இவர்கள் பணத்தை அனுப்பி உள்ளனர்.

அவர்களது உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் என சாதாரண நபர்களை வங்கி கணக்கு தொடங்கச் செய்து, அவர்களது ஏடிஎம் கார்டுகள் மூலம் இந்த பணப் பரிவர்த்தனைகளை செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரும் திருச்சி 2 வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு சர்வதேச அளவிலான ஹவாலா கும்பலுடன் தொடர்பு இருப்பது தெரிய வந்ததை அடுத்து, அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளனர்.

கிரிப்டோ கரன்ஸி, சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை, பங்கு வர்த்தகம் உள்ளிட்டவற்றில் ஈடுபட்டதால் அவர்களுக்கும், தீவிரவாத கும்பலுக்கும் தொடர்பு இருக்கலாம் என்பதால், என் ஐ ஏ அதிகாரிகள் இந்த விவகாரத்தை கூர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

மேலும் இந்த சம்பவத்தில் தொடர்புடைய ராமநாதபுரம் பகத் என்பவரை போலீசார் வலை வீசி தேடி வருவது குறிப்பிடத்தக்கது.

## திருச்சி அரியமங்கலம் குப்பை கிடங்கில்
# அடையாளம் தெரியாத ஆண் பிணம்
# கொலையா? விபத்தா? போலீசார் விசாரணை



திருச்சி, ஜூலை 9

திருச்சி அரியமங்கலம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமாக சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் குப்பை கிடங்கு செயல்பட்டு வருகிறது. இங்கு திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட 65 வார்டுகளில் இருந்தும் சேகரிக்கப்படும் குப்பைகள் கொட்டப்பட்டு மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது.

இந்த குப்பைக் கிடங்கினையொட்டி மனமகிழ் மன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்த மன மகிழ் மன்றத்தில் தினந்தோறும் 500க்கும் மேற்பட்ட நபர்கள் மது அருந்த வந்து செல்வதுண்டு.

இந்த நிலையில், அரியமங்கலம் குப்பைக் கிடங்கில் அடையாளம் தெரியாத ஒருவரின் உடல் நேற்று இரவு போலீசாரால் கைப்பற்றப்பட்டது.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், அரியமங்கலம் மனமகிழ் மன்றத்தில் மது அருந்திய நபர் தவறுதலாக குப்பை கிடங்கின் குப்பை மறுசுழற்சி செய்யும் பகுதியில் விழுந்து தெரியாமல் அப்பகுதியில் இயங்கிய செயின் பொக்லைன் வாகனத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருக்கலாம், அதே நேரம் மர்ம நபர்கள் யாரேனும் சம்பந்தப்பட்ட நபரை கொலை செய்து இந்த குப்பை கிடங்கில் போட்டது தெரியாமல் செயின் பொக்லைன் அவர் மீது ஏறி இருக்கலாம் என்ற கோணத்திலும் அரியமங்கலம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குப்பை கிடங்கில் கைப்பற்றப்பட்ட உடலை பிரேதப் பரிசோதனைக்காக திருச்சி அரசு பொது மருத்துவமனைக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

மேலும், சந்தேக மரணம் என வழக்குப்பதிவு செய்து, உயிரிழந்தவர் யார் என்பது குறித்துப் அரியமங்கலம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்



மதுரை, ஜூலை 9

மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமல் 40 மனுக்கள்பெறப்பட்டுமனுக்கள்மீதுஉரியநடவடிக்கை எடுக்க மாநகர காவல் ஆணையர் உத்தரவிட்டார்கள். இந்த குறை தீர்க்கும் முகாமில் துணை ஆணையர்கள் வடக்கு ,தெற்கு, தலைமையிடம் மற்றும் காவல் உதவி ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

## படந்தாலுமூடு கன்று காலி மார்க்கெட்டில்
# மழை நீர் தேங்கி சுகாதார சீர்கேடு



களியக்காவிளை, ஜூலை. 9

களியக்காவிளை கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை பகுதியான படந்தாலுமூட்டில் மாவட்டத்தில் பிரபலமான கன்று காலி மார்க்கெட் உள்ளது. இதன் அருகில் சாலையோரம் பள்ளம் உள்ளது. இந்த பள்ளத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழைத் தண்ணீர் தேங்கியுள்ளது. இந்த மழைத் தண்ணீரில் சாக்கடை கழிவு நீரும் கலந்துள்ளது. ஆகவே தண்ணீர் மாசுபட்டுள்ளது. சாக்கடை கழிவு நீர் மற்றும் மழைத் தண்ணீரும் சேர்த்து துர் நாற்றம் வீசுகிறது. இதில் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர் கேடு அடைந்துள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பள்ளத்தினை சீரமைத்து மழைத்தண்ணீர் தேங்காமல் உரிய நடவடிக்கையை சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகள் எடுக்க அப்பகுதியினர் வலியுறுத்தியுள்ளனர்.

# ஓசூருக்கு வருகை தந்த சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சருக்கு வரவேற்பு



ஒசூர், ஜூலை,9

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்த சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் ராஜுவ் ஓசூர் மாநகராட்சி 9வது வார்டு பாரதி நகருக்கு வந்தார். அப்பொழுது சௌடப்பா பூங்கொத்து கொடுத்து அமைச்சரை வரவேற்றார். இந்நிகழ்வின்போது முனிராஜ், மூர்த்தி, கார்த்திக், திவாகர், மது, பாபு, மணிகண்டன், தேவராஜ், ரமேஷ், மாதேஷ், ரங்கன், சதாசிவம், மஞ்சு, சதீஷ்,பாப்பண்ணா, ஆனந்த், செந்தில், கண்ணன், அருள், முருகன்,மற்றும் தமிழக வெற்றி கழக உறுப்பினர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

## குமரி ரயில் நிலையங்களில்
# பேட்டரி கார் வசதி செய்ய ரயில் பயணிகள் சங்கம் கோரிக்கை



நாகர்கோவில், ஜூலை. 9

கன்னியாகுமரி மாவட்ட முக்கிய இரயில் நிலையங்களில் ₹10 கட்டணத்தில் பேட்டரி கார் வசதி மற்றும்ஆன்லைன்முன்பதிவு தொடங்க கன்னியாகுமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம்கோரிக்கைவிடுத்துள்ளது.

குமரி மாவட்டத்தில் உள்ள கன்னியாகுமரி, நாகர்கோவில் சந்திப்பு, நாகர்கோவில் டவுன், இரணியல் மற்றும் குழித்துறை ஆகிய இரயில் நிலையங்கள் திருவ னந்தபுரம் கோட்டத்தில் அதிக வருவாய் ஈட்டித்தரும் மிக முக்கியமான நிலையங்களாகும். நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும், ஆன்மீகப் பயணிகளும், பொதுமக்களும் வந்து செல்லும் இந்த முக்கிய இரயில் நிலையங்களில் இதுவரை பயணிகளின் அவசரத் தேவைக்கான பேட்டரி கார் (மின்கல வாகன) வசதி இல்லாமல் இருப்பது பெரும் குறையாக உள்ளது.

மதுரை கோட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி ரயில் நிலையத்தில் ஒரு பயணிக்கு வெறும் 10 ரூபாய் என்ற குறைந்த கட்டணத்தில் பேட்டரி கார் வசதி மிகச் சிறப்பாக இயக்கப்பட்டு வருகிறது. இந்தச் சேவையானது முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அதிக சுமையுடன் குழந்தைகளோடு பயணிக்கும் குடும்பங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

இதேபோன்ற வசதியை, நீளமான நடைமேடைகளைக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கிய நான்கு இரயில் நிலையங்களிலும் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்என்றுதிருவனந்தபுரம்ரயில்வே கோட்ட மேலாளருக்கு மின்னஞ்சல் வழியாக கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை மனுவில், திருநெல்வேலி நிலையத்தைப் போல இங்கும் ஒரு பயணிக்கு 10 ரூபாய் மட்டுமே கட்டணமாக நிர்ணயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், வெளி ஊர்களில் இருந்து இரயிலில் வந்து இறங்கும் பயணிகள் எந்தவித சிரமமும் இன்றி இந்தச் சேவையைப் பயன்படுத்தும் வகையில், ஐஆர்சிடிசி இணையதளம் மற்றும் மொபைல் செயலி மூலமாக ஆன்லைனிலேயே முன்பதிவு செய்யும் வசதியையும் இதனுடன் இணைத்து ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கன்னியாகுமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் சார்பாக திருவனந்தபுரம் இரயில்வே நிர்வாகத்தை கேட்டுக்கொண்டுள்ளனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (08.07.2026) மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், விழுப்புரம் கோட்டம் இணைந்து ரூ.5 இலட்சம் செலவில் நடமாடும் சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.கவிதா, அவர்கள் கொடியசைத்துதொடங்கிவைத்தார்.திருவள்ளூர்சட்டமன்றஉறுப்பினர்டி.அருண்குமார் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.வி.சாய்பிரணித் அவர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பொது மேலாளர் ஜே.கோபாலகிருஷ்ணன், திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலர் ராமகிருஷ்ணன், துணை மேலாளர் பி.வெங்கடேஷன், கிளை மேலாளர் பாஸ்கர், உதவி பொறியாளர் எம்.அரிபாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்

# தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் முதலமைச்சருக்கு நன்றி

திருப்பூர் மாவட்டத்தில் வீடுகளுக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் மின் நுகர்வோர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தார்கள்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர், பல்லடம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில் வீடுகளுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் மே 10 முதல் மின் நுகர்வோர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை மின்சாரம் பயன்படுத்தும்வீட்டுமின்நுகர்வோர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும். பெண்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும். பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும் "சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படை" மாநிலம் முழுவதும் உருவாக்கப்பட்டு. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான புகார்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தமிழ்நாட்டில் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களைத் தடுத்து, கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் போதைப் பொருட்கள் தடுப்புப் படை (AntiNarcotic Task Force) அமைக்கப்படும் என மூன்று முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்டார்கள்.

அதன்படி, 10.05.2026 முதல் இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு, பொதுமக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்படும் சுமையை குறைப்பதற்கும், பணவீக்கத்தின் தாக்கத்தை ஈடுசெய்வதற்கும், குடும்ப மின் நுகர்வோருக்கு இருமாதத்திற்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் குடும்ப நுகர்வோருக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. தகுதி சரிபார்ப்பு, மானியக் கணக்கீட்டு முறை, மின் கட்ட000 உருவாக்கம் மற்றும் கணக்கியல்/அறிக்கை தொடர்பான அம்சங்களில் தேவையான மாற்றங்கள் பில்லிங் மென்பொருளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருப்பூர் மாநகராட்சி, சந்தைப்பேட்டை டி.என்.சி.காலனி பகுதியை சேர்ந்த ராஜாத்தி தெரிவிக்கையில்,

என் பெயர் ராஜாத்தி. நான் திருப்பூர் மாநகராட்சி சந்தைப்பேட்டை பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 59 வயதாகிறது. எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். நான் இப்பகுதியில் நீண்ட வருடங்களாக வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். என் வீட்டிற்கு அருகில் உள்ள தனியார் உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். எனது குடும்பத்தின் அன்றாட செலவுகளை ஏழ்மையான





சூழ்நிலையிலும் சமாளித்து வருகிறோம். இந்த நிலையில் எங்களது வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்படும் சுமையை குறைக்க தமிழ்நாடு முதலமைச்சர் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் இருமாதத்திற்கு 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் எங்களை போன்ற குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இத்திட்டத்தினை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவையயை பூர்த்தி செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் பணி சிறக்க வேண்டும் என தெரிவித்தார். திருப்பூர் மாநகராட்சி, சந்தைப்பேட்டை டி.என்.சி. காலனி பகுதியை சேர்ந்த மகேஷ்வரி தெரிவிக்கையில்,

என் பெயர் மகேஸ்வரி. நான் திருப்பூர் மாநகராட்சி சந்தைப்பேட்டை பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 45 வயதாகிறது. எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். நான் இப்பகுதியில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான்தனியார் ஆயத்த ஆடை ஏற்றுமதி நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறேன். எங்களது குழந்தைகள் கல்விச் செலவு மற்றும் குடும்ப அத்தியாவசியச் செலவுகளை சமாளித்து வரும் சூழ்நிலையில் வீட்டு மின்சார கட்டணம் கூடுதல் சுமையாக இருந்தது.

இந்த நிலையில் எங்களது வாழ்க்கைச் செலவுஉயர்வால்ஏற்படும்சுமையைகுறைக தமிழ்நாடு முதலமைச்சர் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன் மூலம் மின் கட்டண செலவு வேறு அடிப்படை தேவைக்கு பயன்படும். இத்திட்டத்தின் மூலம் எங்களை போன்ற பொருளாதாரரீதியாக பின்தங்கிய மற்றும் நடுத்தர குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இத்திட்டத்தினை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு நன்றியினை முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

தொகுப்பு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்..

## திருச்சி இந்து சமய அறநிலையத்துறை சார்பில்
# சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது: அமைச்சர் ரமேஷ் பேட்டி



திருச்சி, ஜூலை 9

திருவரங்கம் தொகுதிக்குட்பட்ட திருவரங்கம் திருவானைக்காவல் பகுதி பொதுமக்களின் குறைதீர்க்கும் முகாம் இன்று திருவானைக்காவலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அமைச்சர் ரமேஷ் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். பின்னர், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், அமைச்சர்களும், அதிகாரிகளும் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். அதன்படி, இன்று ஸ்ரீரங்கம் மற்றும் திருவானைக்கோவில் பகுதிகளில் மக்கள் குறைதீர் முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

ஸ்ரீரங்கம் கோயிலின் கிழக்கு கோபுர வாசல் திறப்பு குறித்து கேட்டபோது, அந்தப் பணிகளில் சில தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி பணிகளை விரைவுபடுத்தியுள்ளோம். மிக விரைவில் பணிகள் நிறைவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும்.

திருச்செந்தூர் கோயிலில் மாற்றம் இல்லை என்ற குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர், தற்போது 70 முதல் 80 சதவீதம் வரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து மாற்றங்களையும் ஒரே நேரத்தில் கொண்டு வர முடியாது. தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மீதமுள்ள பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

ஸ்ரீரங்கம் கோயிலில் வாகன நிறுத்த வசதி குறித்து, அதற்கான இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. பக்தர்களின் வசதிக்காக தேவையான திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும்.

திருச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு குறித்து ஏற்கனவே மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து துறை அதிகாரிகளுடனும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. சட்டவிரோத விற்பனைகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும், குறிப்பாக இரவு நேர ரோந்துப் பணிகளை தீவிரப்படுத்தவும் காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இளைஞர்களை பாதிக்கும் மது மற்றும் போதைப்பொருட்களை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த சில தினங்களுக்கு முன்பு ஸ்ரீரங்கம் கோயில் இணை ஆணையர் அலுவலகத்திற்கு ஒரு போன் வந்துள்ளது. அதில் 'ஸ்ரீரங்கம் கோயிலுக்கு சிஎம் செக்கரட்டரி வருகிறார்' என்று தகவல் வந்துள்ளது. உடனே முக்கியமான ஊழியர்களுக்கு எல்லாம் தகவல் பறக்க, வழக்கமான நடைமுறைகளோடு கோயிலை சுத்தமாக கூட்டி துடைத்து வைக்க உத்தரவு பறந்தது. கோவில் இணை ஆணையர் புதுக்கோட்டையில் இருந்து அதிகாலையை கோவிலுக்கு ஓடோடி வந்தார்.

காலையில் கோயிலுக்கு வந்த அந்த நபருக்கு எல்லா கதவுகளும் ' படார் , படார்' எனதிறக்கப்பட்டு, நேரடியாக மூலவர் சன்னதிக்கும் தாயார் சன்னதிக்கும் அழைத்துச் செல்லப்பட்டு, ஆள் உயர மாலை அணிவிக்கப்பட்டு, அனைத்து மரியாதைகளும் செய்யப்பட்டு, தரிசனம் செய்து வைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதெல்லாம் முடிகிற தருவாயில் தான் 'இவர் முதலமைச்சரின் செயலாளர் இல்லையே...' என்கிற சந்தேகம் கோயில் ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதன் பிறகு தான் மெல்ல விசாரிக்க தொடங்கி இருக்கிறார்கள். அதற்குள் முழுமையான வி வி ஐ பி கவனிப்புகளுடன் அந்த நபர் சுவாமி தரிசனம் செய்துவிட்டு போயே விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ணகிரி மேல்புதூரில் கட்டிய புதிய நியாய விலைக் கடை
## பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கிருஷ்ணகிரி எம்.எல்.ஏ., திறந்து வைத்தார்



கிருஷ்ணகிரி ஜூலை 9:

கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் மேல் புதூர் கூட்டுறவுநியாயவிலைகடைக்கான புதிய நிரந்தர கட்டிடத்தை இன்று கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் பாண்டியன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். புதிய நியாய விலை கடை திறந்து வைத்த பின் குத்துவிளக்கேற்றிவிற்பனையைகிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் துவக்கி வைத்தார். ரூபாய் 12.67 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இந்த நியாய விலை கடையில் சுமார் 656 குடும்ப அட்டைதாரர்கள் பயனடையவார்கள் என கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் பாண்டியன் கூறினார். பின்னர் பொதுமக்களிடம் பேசும் பொழுது இந்த புதிய நியாய விலை கடையில் பொதுமக்கள் அரிசி பருப்பு சர்க்கரை எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தரமாகவும், எடை அளவு சரியாகவும், பொறுப்புணர்வுடன் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், இதில் ஏதாவது குறை இருப்பின் உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலரை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்றும் பேசினார். கிருஷ்ணகிரி மேல் புதூரில் நடைபெற்ற புதிய நியாய விலை கடை திறப்பு விழா நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் சிவ குருநாதன், கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர்எஸ்.எஸ்.சரவணன், கூட்டுறவு சார்பதிவாளர் சாந்தா, விற்பனையாளர்கள் சசிகுமார், மதுனிகா, உள்ளிட்ட ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர். இறுதியாக பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

## பள்ளிக்கரணை ராம்சர் சதுப்புநிலப் பிரச்சினையில்
# பொது நலனை கருத்தில் கொள்ள வேண்டும் கிரடாய் அமைப்பு வலியுறுத்தல்




சென்னை, ஜூலை09,

தமிழக அரசு பள்ளிக்கரணை ராம்சர் சதுப்பு நிலப்பகுதியை வரையறை செய்ததில் 50 ஆண்டுகளாக இருக்கும் குடியிருப்பு பகுதிகள் பெரிதும் பாதிக்கபட்டுள்ளதாக ரியல் எஸ்டேட்டின் கிரடாய் அமைப்பு கூறுகிறது. சதுப்பு நில பாதுகாக்கப்பட்ட பகுதியான 698 ஹெக்டக்கு வெளியே 1 கி.மீ சுற்றளவில் உள்ள நிலங்கள் மற்றும் தெளிவாக அடையாளப்படுத்தப்படாத, நில அளவை எண்கள் மூலம் இன்னும் நேரடியாக உறுதி செய்யப்படாத கூடுதல் 550 ஹெக்டேர் நிலம் ஆகியவை பிரச்சினைக்கு ரியாத உள்ளது.

இதன் காரணமாக 1 கி.மீ சுற்றளவிற்கு கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டதாலும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பட்டா உரிமையாளர்களும், சுமார் ₹71,500 கோடி மதிப்பிலான வணிக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளும் பாதிப்பு ஏற்படுகிறது.

புள்ளிவிவரங்களின்படி, தோராயமாக ரூ.51,735.88 கோடி மதிப்பிலான வணிகம் பாதிக்கப்பட்டுள்ளது. நேரடி மற்றும் மறைமுக வருவாய் உள்ளிட்ட ஒட்டு மொத்த பொருளாதாரப் பாதிப்பு ரூ.19,790.48 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் பாதிக்கப்பட்ட பகுதியில் ரியல் எஸ்டேட் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பின் குறைந்தபட்ச மதிப்பீடு மட்டுமே. பட்டா உரிமையாளர்கள், தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள ஒட்டு மொத்தப் பாதிப்பு இதைவிட மிகப் பெரியதாக இருக்கலாம்.

மேலும், கட்டுமானத் தொழிலாளர்கள், பொருட்கள் வழங்குவோர், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள், போக்குவரத்து நிறுவனங்கள், சேவை வழங்குநர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் உள்ளூர் வணிகங்களைச் சார்ந்த ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தங்களுக்குள்ள கடமையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள ரியல் எஸ்டேட் துறையினர், பள்ளிக்கரணை ராம்சர் பகுதியைச் சுற்றி விதிமுறைகளை அமல்படுத்தும் போது அரசு சமநிலையான, அறிவியல் பூர்வமான மற்றும் ஆலோசனை அடிப்படையிலான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

# மாணவ, மாணவியர்களுக்கு காமராஜர் விருது: கலெக்டர் வழங்கினார்



நாகர்கோவில், ஜூலை.9

கன்னியாகுமரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தின் சார்பில் மாவட்டத்திற்குட்பட்ட மாணவ மாணவியர்களுடன் காஃபி வித் கலெக்டர் கலந்துரையாடல் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலககுறள்கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்து கொண்டு, மாணவ மாணவியர்களிடையே கலந்துரையாடினார். தொடர்ந்து அவர் பேசுகையில்:

மாணவர்கள் தங்களை எப்போதும் தாழ்த்தி மதிப்பிடக் கூடாது. தங்களின் இலக்குகள் எப்போதும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். உயர்ந்த இலக்குகளை நோக்கி உங்கள் பயணம் இருக்க வேண்டும். கல்வியை முடித்துவிட்டு ஏதோ ஒரு வேலைக்குச்சென்றால் போதும் என்ற குறுகிய எண்ணம் மாணவர்களிடம் இருக்கக் கூடாது. தங்களின் திறமைகளின் மீது சுய சந்தேகம் கொள்ளாமல், எப்போதும் பெரிய விஷயங்களை இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும். நமது இலக்கு உயரமாக இருந்தால் மட்டுமே, நம்மால் அடுத்தடுத்த நிலைகளை எட்ட முடியும். தங்களை தாழ்வாக நினைத்துக் கொண்டால், வளர்ச்சி தடைபடும். இலக்குகளை சரியாக தேர்ந்தெடுத்து, சரியான பாதையில் பயணிக்க வேண்டும்.

தேவையற்ற கவனச்சிதறல்களுக்கு இடம் கொடுக்காமல், படிப்பில் முழு கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்குள் ஒரு சுய கட்டுப்பாடு இருக்க வேண்டும். சுதந்திரம் என்பது நல்லது, ஆனால் அது தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது. வாழ்க்கையில் பெரிய இடங்களை அடைய வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து தமிழ் வழியில் பயின்று கல்வியிலும், கல்வி இணை செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு வருடந்தோறும் காமராஜர் விருது தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2024 25 ஆம் கல்வியாண்டில் தமிழ் வழியில் பயின்று, கற்றல் அடைவுகளிலும் கல்வி இணை செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கிய நம்முடைய மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு முடித்த 15 மாணவர்களுக்கு காமராஜர் விருது பாராட்டு சான்றிதழும், ரூ.10,000 க்கான காசோலையும், பன்னிரண்டாம் வகுப்பு முடித்த 15 மாணவர்களுக்கு ரூ.20,000க்கான காசோலையும் கலெக்டர் வழங்கினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

சேலம், ஜூலை 9

கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரிந்து வரும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில்பதிவு செய்த உறுப்பினர்களுக்கு விபத்து ஈட்டு உறுதி திட்டத்தின் கீழ் உதவி தொகை, இயற்கை மரணத்திற்கான உதவி தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, மூக்கு கண்ணாடி செலவு தொகை(ஈடு செய்தல்), முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நலத்திட்ட உதவிகளை பெற கிறிஸ்தவ இனத்தை சேர்ந்த 18 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்கள் கிறிஸ்துவ தேவாலயங்களில் பணியாற்றி வரும் உபதேசியர்கள், வேதியர்கள், சேஷப் பிள்ளைகள், பாடகர்கள், கல்லறைப் பணியாளர்கள், கிறிஸ்தவ அனாதை இல்லங்கள், தொழு நோயாளர் மறுவாழ்வு இல்லங்களில் பணி புரியும் பணியாளர்கள், முறையான மாதாந்திர ஊதியம் இல்லாத பணியாளர்கள் இந்த நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெற தகுதி பெற்றவர்கள். இந்த நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெறுதலை எளிதாக்கும் வகையில் www.cwb.tn.gov.in என்ற பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் மூலம் தகுதியுடையவர்கள் விண்ணப்பம் செய்து பயன்பெறுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# தஞ்சாவூர் மருது பாண்டியர் கல்லூரியில் நூல் வெளியீட்டு விழா




தஞ்சாவூர் ஜூலை 9

தஞ்சாவூர் மருதுபாண்டியர் கல்வி நிறுவனங்கள் சார்பில் மாணவ னே, மாணவியே, நீ தலைவன் ஆகணும் என்ற நூல் வெளியீட்டு மற்றும் அறிமுக விழா மருது பாண்டியர் கல்லூரி கலையரங்கில் நடந்தது விழாவில் மருது பாண்டியர்கல்லூரிதுணை முதல்வர் தங்கராஜ் அனைவரையும் வரவேற் றார் .மருது பாண்டியர் கல்வி நிறுவனங்களின் தலைவரும், செயலாள ரும் நிர்வாக அறங்காவலருமான மருது பாண்டியன் நூலை வெளி யிட்டு பேசினார்

நூலாசிரியரும் தஞ்சாவூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் தலைவருமான சுவாமி விமூர்த்தனந்தா ஏற்புரை ஆற்றினார் . இதில் மருது பாண்டி யர் கல்லூரி முதல்வர் விஜயா, கல்வியல் கல்லூரி முதல்வர் சுப்பிரமணியன் ஒருங்கிணைப், பாளர் மதுக் கிருத்திகா, பிளாசம் பப்ளிக் பள்ளி மற்றும் பிளாசம் புழு பெல்ஸ் அகாடமி நிறுவனர் அழகு. அழகப்பன், தாமரை பன்னாட்டு பள்ளி முதுநிலை முதல்வர் ஜெயஸ்ரீ பத்ரி நாத் , எனிக்ஸ டெக்னாலஜி இந்தியா பிரைவெட் ந நிறுவனத் தலைவர் ராம் பிரகாஷ், சரஸ்வதி மஹால் நூலக தமிழ் பண்டிதர் மணிமாறன் ,பேராசிரி யர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்

நிறைவாக மருது பாண்டியர் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் சத்ய பிரபா நன்றி கூறினார்

## சின்னமுட்டத்தில் மீனவர்கள் மோதல் விவகாரம்

# 3வது நாளாக விசைப்படகுகள் செல்ல அனுமதி மறுப்பு

கன்னியாகுமரி, ஜூலை. 9

கன்னியாகுமரி சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாக சில விசைப்படகுகள் மீன்பிடிக்க சென்ற விவகாரத்தில் இரு தரப்பு மீனருடைய கோஷ்டி மோதல் ஏற்பட்டது. இந்த பிரச்சனையில் இருதரப்பை சேர்ந்த தலா 7பேர் வீதம் மொத்தம் 14 பேர் மீது காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இந்த பிரச்சனையால் நேற்று புதன்கிழமை 3வது நாளாக விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல அதிகாரிகள் அனுமதி அளிக்கவில்லை. இதனால் விசைப்படகு மீனவர்களுக்கு தொழில் முடக்கம் ஏற்பட்டு, கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கன்னியாகுமரியை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் தூய அலங்கார உபகார மாதா திருத்தல வளாகத்தில் நேற்று முன்தினம் மாலை திரண்டு தர்ணாவில் ஈடுபட்டனர். இந்த கூட்டத்தில் சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து நேர கட்டுப்பாட்டை மீறி மீன்பிடிக்க சென்ற விசைப்படகுகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் மீன்பிடிக்க செல்ல மீன்வளத்துறையால் விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்,

இந்த தடை காரணமாக கன்னியாகுமரியை சேர்ந்த 15 ஆயிரம் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து மீனவர்களும் மீன்பிடிக்க செல்ல மீன்வளத்துறை அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக அதிகாரிகள், காவல் துறையினர் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த விவகாரத்தில் நேற்று மீண்டும் இருதரப்புகளிடையே தனித்தனியாக பேச்சுவார்த்தை நடந்தது. பின் இருதரப்பை சேர்ந்த சமாதான பேச்சுவார்த்தைக்கு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். தொடர்ந்து மூன்று நாட்களாக கன்னியாகுமரி சின்ன முட்டம் மீனவர் கிராமங்களில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வைகை பொறியியல் கல்லூரியில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027ஐ முன்னிட்டு, மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி வகுப்பினை பார்வையிட்டார்.

# தருமபுரி நகர பேருந்து நிலையத்தில் இளம் பெண்ணிற்கு கத்திக்குத்து

## வாலிபரை பிடித்து தர்ம அடி கொடுத்த பொதுமக்கள்



தருமபுரி ஜூலை 09

தருமபுரி அருகே உள்ள தேங்காய் மரத்துபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சின்னசாமி (வயது 31) இவர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை நிறுவன ஊழியர். இவர் நகை கடையில் பணிபுரிந்து வரும் பெண்ணை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது . அந்தப் பெண் சின்னசாமியுடன் பேசாமல் இருந்துள்ளார். இந்த நிலையில் தருமபுரியில் உள்ள நகைக்கடையில் பணியை முடித்து வீட்டுக்கு திரும்பிய அந்தப் பெண் தருமபுரி நகரப் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்தார். அப்போது அங்கு வந்த சின்னசாமி கையில் வைத்திருந்த கத்தியால் அந்தப் பெண்ணை கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதியில் குத்திவிட்டார் . பின்னர் அங்கிருந்து ஓட முயன்றார் இதனால் பேருந்து நிலையத்தில் காத்திருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனே சின்னசாமியை பிடித்து தர்ம அடி கொடுத்தனர். ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்த அந்தப் பெண்ணை அந்த பகுதியில் இருந்தவர்கள் மீட்டு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது பற்றி தகவல் அறிந்த தருமபுரி நகர காவல் துறையினர் அங்கு சென்று சின்னசாமியை பிடித்து விசாரணை நடத்தினார்கள். அப்போது காதல் விவகாரத்தால் இந்த சம்பவம் நடந்திருப்பது தெரிய வந்தது. பொதுமக்கள் தாக்கியதில் சின்னசாமியும் காயம் அடைந்ததால் அவரை காவல்துறையினர் தருமபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இந்த சம்பவம் குறித்து தருமபுரி நகர காவல் துறையினர் விசாரணை நடத்திய வருகிறார்கள்.



தருமபுரி மாவட்டம் அரூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட காரப்பாடி மலை கிராமத்தில் அடிப்படை வசதிகளை குறித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பொது மக்களிடம் கோரிக்கைகளை குறித்து கேட்டு அறிந்தார். இந்த ஆய்வின்போது அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை பேரூராட்சியில் ஆவின் நிறுவனம் சார்பில் 5,000 லிட்டர் கொள்ளளவுகொண்டபுதியபால்குளிரூட்டும்நிலையத்தை பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரிஜங்கரன்முன்னிலையில்,மாவட்டஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள். தென்கரை பேரூராட்சியில் பால்வள மேம்பாட்டுக்கான தேசிய திட்டம் (NPDD) 20222023இன் கீழ் ரூ.11,37,000/ கட்டிட மதிப்பீட்டிலும், ரூ.17,00,000/ இயந்திர மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.28,37,000/ மதிப்பீட்டில்பால்குளிர்விப்பான்நிலையம்அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் கறவைமாடு வளர்ப்போரிடமிருந்து நாள்தோறும் சுமார் 5000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, குளிரூட்டப்பட்டு பல்வேறு இடங்களுக்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது என ஆவின் நிர்வாகம் முலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் துணைப்பதிவாளர் (பால்வளம்) வெங்கடேசன், ஆவின் பொதுமேலாளர் ரமேஷ், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் வெள்ளைப்பாண்டி, ஆவின் கண்காணிப்பு அலுவலர் ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# களியக்காவிளை பேருந்து நிலையம் கலெக்டர் ஆய்வு



களியக்காவிளை, ஜூலை.9

கன்னியாகுமரி மாவட்ட பேரூராட்சிகள் துறை சார்பில் களியக்காவிளை பேருந்துநிலைய கட்டுமான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று 8. ம் தேதி ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

களியக்காவிளையை சுற்றி உள்ள பொதுமக்கள், பயணிகள், வியாபாரிகள் உள்ளிட்டோர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் களியக்காவிளை பிரதான சந்திப்பில் களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியின் சார்பில் ரூ.9.20 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான பணிகள் கடந்த 2024 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பேருந்துநிலையத்தில் தரைத்தளத்தில் 4 கடைகளும், முதல்தளத்தில் 4 கடைகளும், இரண்டாம் தளத்தில் 3 கடைகள் மற்றும் உணவகமும் கட்டப்பட்டு வருகிறது. மேலும் அலுவலகங்கள், ஆண்கள் பெண்கள் என தனித்தனியாக கழிப்பறைகள், கை கழுவும் இடம், சுகாதார பொருட்கள் வைக்கும் அறை, குடிநீர் வசதிகள் என அடிப்படை வசதிகளுடன் பேருந்துநிலையம் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் இப்பேருந்து நிலையத்தில் 150 க்கும் மேற்பட்ட பேருந்துகள் தினமும் வந்து சென்று கொண்டிருந்தது. அதற்கு ஏற்ப கூடுதல் வசதிகளுடன் வடிவமைத்திட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக பணிகளை நவம்பர் மாதத்திற்குள் அனைத்து பணிகளையும் முடித்திட அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து பளுகல் பேரூராட்சிக்குட்பட்ட பளுகல் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் உதவி இயக்குநர் பேரூராட்சிகள் கோமதி, களியக்காவிளை பேரூராட்சி தலைவர் சுரேஷ், உதவி செயற்பொறியாளர் சிவசங்கர், செயல் அலுவலர் சந்திரகலா, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், குழு தலைவர் / ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் . கே.இ.பிரகாஷ் தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி இணைத்தலைவர்/ திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், பவானி சட்டமன்ற உறுப்பினர் கே.சி.கருப்பணன், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் உட்பட பலர் உள்ளனர்.

# குமரியில் 18 வயதிற்கு உட்பட்டோர் வாகனம் ஓட்டினால் பெற்றோர் மீது வழக்குப்பதிவு

## மாவட்ட போலீஸ் எச்சரிக்கை

நாகர்கோவில், ஜூலை. 9

குமரிமாவட்டத்தில்சாலைவிபத்துகளை குறைத்து உயிரிழப்புகளை தவிர்க்கும் நோக்கில் விபத்தில்லாத குமரி என்ற சிறப்பு திட்டத்தை மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தீவிரமாக செயல்படுத்தி வருகிறார். மாவட்டத்தில் சாலை விபத்துகளை முற்றிலும் தவிர்க்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக இளஞ்சிறார்கள் வாகனம் ஓட்டுவதற்கு எதிராக மிகக் கடுமையான எச்சரிக்கை மாவட்ட காவல் துறை விடுத்துள்ளது. சமீப காலமாக உரிமம் பெறாத சிறுவர்கள் இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்களை ஓட்டி செல்லும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. இது சாலை பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவதோடு, விபத்துகளுக்கும் காரணமாகிறது. இதை கட்டுப்படுத்த குமரி மாவட்ட காவல் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.அதுதொடர்பாகமாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

மோட்டார் வாகனச் சட்டத்தின்படி, 18 வயதிற்கு உட்பட்ட இளஞ்சிறார்கள் வாகனம் ஓட்டுவது சட்டவிரோதமானது. 18 வயதிற்கு கீழ் உள்ள இளஞ்சிறார்களை வாகனம் ஓட்ட அனுமதிக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 281 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், பிரிவு 199Aன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படும். மேலும், குற்றத்தின் தன்மைக்கேற்ப 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

எனவே, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் தங்களது 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை எந்தச் சூழ்நிலையிலும் வாகனம் ஓட்ட அனுமதிக்க வேண்டாம் என கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கேட்டுக்கொ ள்கிறது.

பொதுமக்களின் உயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், இதுபோன்ற சாலை விதிமீறல்களுக்கு எதிரான கண்காணிப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகள் இனி வரும் காலங்களிலும் மேலும் தீவிரப்படுத்தப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் எவ்வித பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இத்தகைய கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தொடர்ந்து பலப்படுத்தப்படும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக ரூ.2.94 லட்சம் மோசடி

குளச்சல், ஜூலை.9

குளச்சல் அருகே வாணியக்குடி பகுதியை சேர்ந்தவர் இருதய தாசன் (58). இவர் கடந்த 1995 முதல் 2017 வரை 22 வருடங்கள் சவுதி அரேபியாவில் கொத்தனாராக வேலை செய்து வந்துள்ளார். இவரது 3வது மகன் வினிஷ். பிபிஏ பட்டப்படிப்பை முடித்துவிட்டு, வீட்டில் இருந்து வந்தார். இந்த தலையில் அவருக்கு வெளிநாட்டில் வேலை தேடி வந்துள்ளனர்.

அப்போதும் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியை சேர்ந்த ராஜன் (55) என்பவர் அறிமுகமாகி, கடந்த பிப்ரவரி மாதம் 2ம் தேதி ராஜன் வாணியகுடிக்கு வந்துள்ளார். தொடர்ந்து இருதயதாசன் இடம் தான் சிங்கப்பூரில் உள்ள ஸ்ரீ முருகன் சூப்பர் மார்க்கெட்டில் சூப்பர்வைசராக வேலை செய்து வருவதாக அறிமுகம் செய்து கொண்டார்.

அப்போது சூப்பர் மார்க்கெட்டில் வேலைசெய்யதற்போது 20பேர் தேவை எனவும், ஒரு நபருக்கு 2.50 லட்சம் ரூபாய்செலவுசெய்தால்உடனேவேலை தயாராக இருப்பதாகவும் ஆசையை தூண்டி உள்ளார்.

இதை முழுமையாக நம்பியே இருதய தாசன் வினிஷின் பாஸ்போர்ட், ரூ.31 ஆயிரம் உடனடியாக கொடுத்து இருக்கிறார். மேலும் பல தவணைகளாக ஜிபி மூலம்ரூ2லட்சத்து94ஆயிரம்கொடுத்து உள்ளார். ஆனால் 5 மாதங்கள் ஆகியும் சங்கரன்கோவில் இருந்து வந்த ராஜன் இருதய தாசன் மகனுக்கு விசா ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இது தவிர பலமுறை பணம் கேட்டும் பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. இதனால் சந்தேகம் அடைந்த இருதய தாஸ் குளச்சல் காவல் நிலையத்தில் புகார் செய்தார். புகாரின் பேரில் போலீசார் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியை சேர்ந்த ராஜன் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.